# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 39

# கர்த்தரின் இரண்டாம் வருகை

பாகம்–3



## Our Lord's 2nd Presence

Part- 3

Bible Research and Study Centre

## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# கர்த்தரின் இரண்டாம் வருகை

பாகம்-3



# Our Lord's Second Presence

*இயேசுவின் இரண்டாம் வருகையின் நாள் குறித்த காலக்கணக்கு*

நாம் இன்று நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த மூன்றாம் பகுதியினை ஆராயலாம்.

☆ இன்று நம் பாடம் இரண்டாம் வருகை எப்பொழுது சம்பவிக்கும் என்பது குறித்த காலக்கணக்குகளைப் பற்றியதாகும்.

☆ நம் ஆண்டவரின் வருகை எப்போது என்பதைக் குறித்தும், நம் ஆண்டவரின் வருகையின் விஷயங்களையும், வருகையின் தன்மைகளையும் மிக விளக்கமாக

**3 கிரேக்க வார்த்தைகளாகிய பரோசியா, எபிப்பானியா, அப்போகலுப்சிஸ்**

மூலம் விரிவாக ஆராய்ந்து அறிந்தோம். இதன்மூலம் பூமியில் அவருடைய இரண்டாம் வருகை(பிரசன்னம்) 1) காணக்கூடாததாகவும் 2) வல்லமையோடும், அதாவது முழு அதிகாரத்தோடும் இருக்கும். இப்பூமியில் முன்கூட்டியே வெகுகாலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய ராஜ்யத்தை கர்த்தராகிய இயேசு விரிவுபடுத்துவார்(மத்தேயு 6:10). ஆனால் இப்பொழுது ஒரு கேள்வி என்னவென்றால்,

☆ வேதாகமம் வெகுநாட்களாக எதிர்பார்க்கப்படும் அந்த நாளைக் குறித்து வெளிப்படுத்துகிறதா? அல்லது காலத்தேதியை தெரிவிக்கிறதா? என்றால் வேதாகமம் ஆம் என்று பதிலளிக்கிறது.

**யோபு 24:1**

" சர்வவல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க, அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன"

சர்வ வல்லவரைப் பற்றி அறிந்தவர்கள் கிறிஸ்துவின் 2ம் வருகையில் நிர்ணயிக்கப்பட்ட கால அளவையும் நிச்சயமாக அறிந்திருப்பார்கள் என்று காண்கிறோம்.

**நீதிமொழிகள் 25:2**

" காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை.
காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை "

இங்கு கூறப்பட்டுள்ள ராஜாக்கள் யார்? இவர்கள் உண்மை கிறிஸ்தவர்களாவர் என்று பின்வரும்

வசனம் கூறுகிறது -

**வெளிப்படுத்தல் 1:6**

" தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும்"

இவ்வசனத்திலும் 'காரியத்தை ஆராய்வது" என்பது, 2ம் வருகை குறித்த காலத்தை உள்ளடக்கியது.


**ஏசாயா 34:16**

" கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். இவைகளில் ஒன்றும் குறையாது. இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது. அவருடைய வாய் இதைச்சொல்லிற்று, அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்"

மறுபடியும் இந்தக் கேள்விக்கு பதில் கிடைக்க இந்த விஷயத்தை மூன்று கோணங்களில் ஆராய்ந்து பார்க்கலாம்.

1. தீர்க்கதரிசன வார்த்தைகள்
2. நியாயப்பிரமாணத்தில் காணப்படும் காலக்கணக்கு
3. வேதாகம காலக்கணக்கு

## 1. தீர்க்கதரிசன வார்த்தைகள்



நாம் ஏற்கனவே தானியேல் புத்தகத்தில் வரக்கூடிய தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும், 2ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் ராஜாவின் கனவில் காணப்பட்டபெரிய சிலையையும், பிறகு ஒரு கல் அவற்றை உடைத்து நொறுக்கினதையும் படித்துள்ளோம். இவையனைத்தும் தேவராஜ்யம் இந்த பூமியின்மீது ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்த தீர்க்கதரிசன பகுதிகளாகும். நாம் இப்பொழுது குறிப்பிட்ட வேதப்பகுதிக்கு விஷேசமான கவனம் செலுத்துவோமாக.

**தானியேல் 2:44**

"அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்."

தேவனுடைய ராஜ்யம்' அந்த ராஜாக்களின் நாட்களிலே" ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்த தீர்க்கரிசன வசனமாகும். சரி ,

- யார் இந்த ராஜாக்கள்? இந்த ராஜாக்கள் யாரை சுட்டிக்காட்டுகிறது? என்றால் சிலையில் உள்ள 10 விரல்களையும், அவை கடைசி உலக ராஜாக்களான ரோமப் பேரரசையும் குறிக்கிறது.
- இரும்பும் களிமண்ணும் கலந்த கலவை எதைக் காட்டுகிறது என்றால், ஐரோப்பிய தேசத்தின் மதத்தைச் சார்ந்த அரசாங்கம் ஆகும். இவை கிறிஸ்தவ மார்க்கம் என்று அழைக்கப்பட்டது. புதிய பகுதியான 4வது உலகப் பேரரசான ரோமப் பேரரசையும், அதைத் தொடர்ந்து போப்பு

மார்க்கமான புனித ரோமப் பேரரசையும் குறிக்கும்.

கிபி 1799ல் போப் அரசாங்க அதிகாரம் வீழ்ந்தபிறகு, ஐரோப்பாவின் கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்பட்ட 10 விரல்களும் வளர்ச்சியடைந்து உலகின் அந்நிய தேசங்களில் குடியேற ஆரம்பித்தனர். இவ்வாறாக அவர்கள் உலகை ஆள ஆரம்பித்தார்கள். பிரிட்டிஷ் பேரரசு, பிரெஞ்ச் பேரரசு, போர்ச்சுக்கல் பேரரசு, ஸ்பானிஷ் பேரரசு, டச்சு பேரரசு என்று பல பேரரசுகள் அப்போது இருந்தன. தேவனுடைய ராஜ்யத்தின் நாட்கள் ஸ்தாபிக்கப்படும்போது இந்த ராஜாக்கள் இருப்பார்கள்.

நாம் இப்போது தானியேலின் சிலையில் காணப்பட்ட 4 உலகப்பேரரசின் ஆளுகையைக் குறிக்கின்ற நாட்களையும், ராஜாக்களின் காலங்களையும் புரிந்துகொள்வோமாக. இந்த உலகத்தை ஆள தேவனால் அனுமதிக்கப்பட்ட புற ஜாதிகளின் காலமே இவையாகும்.

**லூக்கா 21:24**

"பட்டயக்கருக்கினாலே விழுவார்கள். சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள். புறஜாதியாரின்காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்"

கிமு 606ல் கடைசி யூத ராஜாவான சிதேக்கியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு பாபிலோன் அரசாட்சி தொடங்கியது.இந்த புறஜாதிகளின் காலங்கள் ஏழத்தனை என்றும் அல்லது 7 வருடங்கள் என்று கீழ்க்காணும் வசனங்களில் காணலாம் -

**லேவியராகமம் 26:28**

"நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன்"

**எசேக்கியேல் 21:25-27**

"இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு. அது இனி முன்போலிராது. தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன். உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும். அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் "

(இந்த பாடத்தை விளக்கமாக தீர்க்கதரிசனத்தின் திறவுகோல்கள் என்ற வகுப்பில் படித்தோம்). ஏழத்தனை என்பது தீர்க்கதரிசன காலக் கணக்காகும்

**7 x 360 = 2520 நாட்கள்**

என்று பார்த்தோம். தீர்க்கதரிசன கணக்கின்படி ஒரு நாள் என்பது ஒரு வருடமாகும்.

**எசேக்கியேல் 4:6**

" ..யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பதுநாள் வரைக்கும் சுமக்கவேண்டும். ஒவ்வொரு வருஷத்திற்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்"

இவ்வாறாக 2520 நாட்கள் - 2520 வருடங்கள். இந்தக் காலம் கிமு 606ல் தொடங்கி, 2520

வருடங்களுக்குப் பிறகு முடிவடைகிறது. வேதாகம தீர்க்கதரிசனப்படி தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் அந்த ராஜாக்களின் நாட்களில் இருக்கும்.

இதில் தெளிவாக தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் கால தேதிகளையும், இரண்டாம் வருகையையும் அந்த ராஜாக்களின் அரசாட்சியின் நாட்களில் இருப்பதை கண்டுபிடிக்கலாம். புறஜாதிகளின் காலத்தை எளிமையாக கணக்கெடுப்பின்மூலம் இந்த ராஜாக்களின் ஆட்சி முடிவு பற்றி காணலாம்.

அதாவது 2520 - 606 - 1914. உண்மையாக கிபி 1914ல் முதல் உலகப்போரில் ஐரோப்பாவில் கால்விரல்களுக்கு நடுவே தோன்றி திடீரென்று முன்எச்சரிக்கை இல்லாமல் இந்த ராஜாக்களும் ஏகாதிபத்திய ராஜ்யமும் முடிவடைந்தது. இவ்வாறாக நாம் இயேசுவின் இரண்டாம் வருகையின் கால தேதியையும், தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும் கிபி 1914க்கு முன்பாக நிர்ணயிப்போம்.

உண்மையில் நாம் இப்பொழுது மனுஷகுமாரனின் நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதை நம்புவதற்கு கடினமாக இருக்கிறதா?

1914ம் வருடம் துவங்கி, உலகில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் அடையாளங்களையும் சற்று கவனித்துப் பாருங்கள்.

⇨ இந்தக் காலப்பகுதியில் விஞ்ஞான கண்டுபிடிப்புகளும், தொழில்நுட்ப வளர்ச்சிகளும் 1000 மடங்குக்கு மேலாக முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணலாம் இதன்மூலம் பின்வரும் வசனம் நிறைவேறுகிறது




**தானியேல் 12:4**

" முடிவுகாலமட்டும்.. அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்"

'**அநேகர் அங்கும் இங்கும் ஓடி**' என்பது போக்குவரத்து பெருகியிருப்பதைக் குறிப்பிடுகிறது. உலகின் அனைத்து நாடுகளையும் சென்றடைவதற்கான வாய்ப்பு அன்று முதல் துவங்கியது.




இதைப் புரிந்துகொள்ள இன்று நாம் பெற்றிருக்கிற அநேகவிதமான போக்குவரத்து வசதிகளை சற்று கவனிப்பது நலமாயிருக்கும்.

⇨ மூன்று சக்கர வாகனங்கள்,நான்கு சக்கர வாகனங்கள்,பதினாரு, இருபது சக்கர வாகனங்கள் வரை அனைத்து விதமான வாகனங்கள் உள்ளது.






➡ பேருந்துகள் பயணச் செலவுகளைக் குறைத்து, அநேகர் பல இடங்களுக்கு குறைவான செலவில் பயணிப்பதை சாத்தியமாக்கியுள்ளது

➡ லாரிகள் ஜனங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அநேகமைல்கள் பிரயாணிக்கின்றன

➡ ரயில் போக்குவரத்து- நீண்ட தூர பயணத்திற்கு வசதியாகஉள்ளது. இதிலும் நீராவியிலிருந்து டீசலுக்கும், அதிலிருந்து மின்சாரத்திற்கும், இப்பொழுது காந்த சக்தியினால் இயக்கப்படும் என்ஜினுக்குமாக மாறியுள்ளது

➡ விமானப் போக்குவரத்து - நீண்டதூரத்தை சொற்ப நேரத்தில் கடக்கும் வகையில் அமைந்துள்ளது. மனிதனை பூமியின் காற்று மண்டலத்திற்கு வெளியே அழைத்துச்சென்று.. சந்திரனைத் தொடுவதற்கான ராக்கெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் கடந்த 100 வருடங்களில் மிகக் குறுகிய காலத்தில் நிறைவேறியுள்ளது.




➡ கடல்வழிப் போக்குவரத்து - நீண்ட தூர பயணத்திற்கு பயன்படுத்தப்பட்ட இந்த போக்குவரத்தும் அநேக மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்டுள்ளது.

➡ இதைத் தவிர கல்வி கற்பதற்கும், அதைப் பயன்படுத்துவதற்குமான சுதந்திரம், சத்தியத்தை தெளிவாகவும் ஆழமாகவும் விபரமாகவும் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை அதிகரித்திருக்கிறது. இது கர்த்தருடைய பிரசன்னம் வந்திருப்பதற்கான மற்றுமொரு உறுதியான சாட்சியாகும்.

**லூக்கா 12:37**

"எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்"

ஆம்.அந்த மாபெரும் சத்தியங்களை கர்த்தர் தாமாக கொடுப்பதைக் காண்கிறோம். மேலும் மத்தேயு 24ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடையாளங்கள் இக்காலங்களில் நிறைவேறிவருவதையும் காண்கிறோம் -

**மத்தேயு 24:3**

"அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி .."

இங்கு நானே கிறிஸ்து என அழைத்துக்கொள்வது, கிறிஸ்துவின் சரீரமாக சபையாக அழைத்துக்கொள்வதைக் குறிக்கிறது.

1914ம் வருடத்திற்குப் பிறகு சபைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை இது குறிக்கிறது.

**மத்தேயு 24:6**

" யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். கலங்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும் முடிவு உடனே வராது"



1914முதல் தேசங்களுக்கு இடையில் உருவாகும் யுத்தங்களைக் குறித்துப்பேசுகிறது. 1914ல் முதலாம் உலகப்போர், 1939ல் இரண்டாம் உலக யுத்தம் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற யுத்தங்கள்.

**மத்தேயு 24:7**

" ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்"

தேசங்களுக்கிடையில், அவர்கள்மீது காலனி ஆதிக்கம் செலுத்தின தேசங்களுக்கு விரோதமாக எழும்பும் புரட்சி மற்றும் சுதந்திரப் போராட்டங்களை குறிப்பதாக நாம் வாசிக்கிறோம் -

**லூக்கா 21:29,30**

"அன்றியும் அவர்களுக்கு ஒருஉவமையைச் சொன்னர் - அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்"



அத்திமரம் என்பது இஸ்ரயேல் தேசத்திற்கு அடையாளமாகவும், மரங்கள் என்பது மற்ற தேசங்களுக்கு அடையாளமாகவும் இருக்கிறது. இவர்களும் தங்கள் சுதந்திரத்தை அதே காலத்தில் பெறுவார்கள்.அத்திமரத்துக்கு அடையாளமாக இருக்கிற இஸ்ரயேல் தேசம் கிட்டத்தட்ட 1900 வருடங்களுக்குப் பிறகு1948ம் வருடம் மீண்டும் ஒரு தேசமாக உருவானது

இப்பொழுது நம் கர்த்தரின் வருகையின் சரியான வருடத்தை தெரிந்துகொள்ள மற்றும் ஒரு தீர்க்கதரிசனத்தை பார்ப்போம்.

**தானியேல் 12:11,12**

"அன்றாட பலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்கால முதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறு நாள்செல்லும். ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்"

இந்த நாட்கள் என்பதின் அர்த்தம் என்ன? இந்த எண்கள் எதைக் குறிக்கிறது? இந்த காலக்கணக்கு மற்றும் ஒரு காலத்திற்கு தொடர்புடையதாக இருக்கிறது.

**தானியேல் 12: 7** " ஒரு காலமும் காலங்களும், அரைக் காலமும் செல்லும் ..."

இந்தக் காலம் மேலும் தானியேல் 7:25லும், வெளிப்படுத்தல் 12:14லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எல்லா வசனங்களும் அந்திக்கிறிஸ்துவின் காலத்தைக் குறிக்கிறது(இதைப்பற்றி 36,37,38


பாடங்களில் படித்துள்ளோம்)

தீர்க்கதரிசன காலக்கணக்குப்படி காலம் என்பது வருஷத்தையும், மூன்றரை காலம் என்பது மூன்றரை வருஷம் என்பதையும் குறிக்கும். அதாவது 1260 நாட்கள் என்று குறிப்பிடலாம்.

வெளிப்படுத்தல் 12:6

" ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது"

42மாதங்கள் என்று வெளிப்படுத்தல் 13:5இலும், இந்த 1260 நாட்கள் என்பது நேரடியாக 1260 வருடங்களையும், அவை கிபி 539ல் தொடங்கி 1260 வருடங்களுக்குப் பின்பு கிபி 1799ல் முடிவடைந்தது. மற்ற இரண்டு தொடர்புடைய கால தீர்க்கதரிசனங்கள் தானியேல் 12ம் அதிகாரத்தில் கிபி 539ல் தொடங்குவதைக் குறிக்கிறது. இவ்வாறு தானியேல் 12:11ல் கூறப்பட்டுள்ளது எதை அடையாளமாகக் காட்டுகிறது என்றால், 1290 + 539 = கிபி 1829.



4 இந்த காலத் தேதியின்முக்கியத்துவம் என்ன? இந்த காலத் தேதியில் தான் 1829ல் மில்லர் இயக்கம் தொடங்கப்பட்டதைக் காட்டுகிறது. இது எதை அறிவிக்கிறது என்றால், வில்லியம் மில்லரின் கருத்துப்படி, அவர் படித்த தீர்க்கதரிசனத்தின்படி நம் ஆண்டவரின் 2ம் வருகை 1843-1844ல் இருக்கும். அவரைப் பின்பற்றினவர்கள் செகண்ட் அட்வென்டிஸ்ட் என்றே அழைக்கப்பட்டனர். அவர்கள் கர்த்தரை மாம்சத்தில் எதிர்பார்த்த காலதேதி தோல்வியில் முடிவடைந்தது. ஆனால் தோல்வி அடைந்த காலத்தேதியை பற்றி மத்தேயு 25:5ல் கூறப்பட்டுள்ளது. மணவாளன் வரத் தாமதித்தபோது தானியேல் 12:12ல் 1335நாள் மட்டும் காத்திருந்து சேர்பவன் பாக்கியவான், வருகையின் காலத்தேதியை நோக்கி காத்திருக்கிறவன் பாக்கியவான் என்பதின் அர்த்தம் என்ன? என்று பார்க்கலாம்.

4 539 +1335 = கிபி 1874. இந்த வருடத்தில் தான் நம் ஆண்டவர் இரவில் திருடனைப்போல முழுமையாக மற்ற எல்லோருக்கும் தெரியாதவிதத்தில் வந்தார். அன்றிலிருந்து, அவருடைய பரோசியா அல்லது மறைமுகமான பிரசன்னம் தொடங்கியது. நாம் இப்போது 1874ம் வருட காலத்தேதியை வேறு இரண்டு கோணங்களிலிருந்தும் நிரூபிக்கலாம்.




## 2. நியாயப்பிரமாணத்தில் உள்ள காலக்கணக்கு

நியாயப்பிரமாணத்தில் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் யூபிலி விதியாகும்(இவற்றைக்குறித்து 40வது வகுப்பில் விளக்கமாக படித்தோம்). இந்த விதியானது இஸ்ரயேல் மக்களின்

உரிமைகளையும், சொத்துக்களையும் 50 வருடத்திற்கு ஒருமுறை திரும்பகொடுத்தலை, அதாவது இழந்ததை திரும்ப பெற்றுக்கொள்ளுதலை நிச்சயப்படுத்துகிறது. இது ஆதாமின் குடும்பமாகிய முழு மனுக்குலத்திற்கும் அளிக்கவிருக்கும் மிகப்பெரிய திரும்ப கொடுத்தலைப் பற்றிய ஒரு நிழலாகும். நாம் தேவனுடைய உயர்ந்த திட்டத்தில் யூபிலி ஒரு வருடம் அல்ல. நிஜமாகிய யூபிலியில் 1000 வருடங்களாகும். இந்தக் காலம் எங்கு வருகிறது? வேத வசனம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

**அப்போஸ்தலர் 3:19**

" ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்தில் இருந்து,
இளைப்பாறுதலின் காலங்கள்வரும்படிக்கு.."

**அப்போஸ்தலர் 3:21** "நிறைவேறித்தீரும் காலங்கள் வருமளவும் "

**மத்தேயு 19:28** " மறுஜென்ம காலத்திலே .. "

மிகப்பெரிய யூபிலியான 1000 வருடம் எப்போது ஆரம்பமாகும்? இதற்கான பதிலைநாம்

**அப்போஸ்தலர் 3:19**

" முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கு"

இவை இயேசு 2ஆம் வருகையில் தான்.

ஆதலால் நாம் படித்த 1000 வருடயூபிலியின் துவக்க நாள் எதுவாக இருக்கலாம்? கடைசியாக இஸ்ரயேல் ஆசரித்த உண்மையான யூபிலி கிமு 625 ஆகும். அதன்பிறகு 19 வருடங்களுக்குப்பின் சிதேக்கியா ராஜாவின் வீழ்ச்சிக்குப் பிறகு முழு தேசமும் பாபிலோனுக்குள் 70 வருடங்கள் சிறைப்பிடித்து கொண்டுபோகப்பட்டது. ஆகவே கிமு 625லிருந்து நிழலான யூபிலி சுற்று ஆரம்பமானது. நிழலான யூபிலி 1 X 50 வருடங்கள். ஆனால் நிஜமான யூபிலி 50 X50 = 2500 வருடங்கள். ஆகவே நாம் இங்கு குறிப்பிடும் வருடம் கிமு 2500 - 625 = கிபி 1875. நிழலான யூபிலி ஆரம்பமானதிலிருந்து, இந்த 2500 ஐ கூட்டினால் கிபி 1875 வரும். இவற்றை நாம் சரியாக புரிந்துகொள்ளவேண்டுமானால் இந்த நிஜ யூபிலியான 2500லிருந்து 625ஐ கழிக்கவேண்டும். ஆக இந்த நிஜ யூபிலி1875நிழல் யூபிலியானகடைசிஒரு வருடம் சேர்க்கப்பட்டுள்ளஅந்த ஒருவருடத்தை கழித்தால் வருவது கிமு 625+ 2499 = கிபி 1874. இவ்வாறாக ஆயிரம் வருட யூபிலி கிபி 1874முதல் 2874வரை இருக்கும். இவ்வாறாக மீண்டும் இரண்டாம் வருகையின் காலத்தேதியான 1874க்கு இது மீண்டும் ஒரு சாட்சியாகும். நாம் இப்போது இரண்டாம் வருகையின் கால தேதிக்கு இன்னும் ஒரு உறுதி செய்த ஆதாரத்தைப் பார்ப்போம்.

## *3.வேதாகம காலக்கணக்கு*




இரண்டாம் வருகைக்கு ஆதாரமாக வேதாகம காலக்கணக்கையும் நாம் தேடி அறியவேண்டும். எப்படி என்று இப்பொழுது காண்போம். வேதாகம காலக்கணக்கு வகுப்பு 23ல்ஆதாமை சிருஷ்டித்த நாளிலிருந்து, கிறிஸ்துவுக்கு முன்புவரை 4128 வருடங்கள்(ஆதி 5:3) அதாவது கிபி 1வரை. இவ்வாறாக வேதாகம காலக்கணக்கு 2ம் வருகையின் காலத் தேதியான 1874க்கு

ஆதாரமாக உள்ளதா? என்பதையும் இப்போது நாம் காணலாம்.

**யோபு 5:17-19**

"இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். ஆகையால் சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார். அவர் அடிக்கிறார். அவருடைய கை ஆற்றுகிறது. ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார். ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது"

ஆறு இக்கட்டுக்கள் என்பதன் அர்த்தம் என்ன? மற்றும் ஏழாவது விடுதலை என்பதன் அர்த்தம் என்ன? இந்த வேதப்பகுதி மனிதனுக்காக தேவன் வைத்திருக்கும் தெய்வீகத் திட்டத்தை சுட்டிக்காட்டுகிறது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசித்தநாளில் இருந்து(ஆதி2:16) இன்னும் வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், தெய்வீக ஏற்பாட்டுக் காலங்களில் உள்ள நன்மை தீமை அனுபவங்கள் ஆகும். ஆறு இக்கட்டுகள் என்பது ஆறு நாட்களான ஒவ்வொரு ஆயிரம் வருடங்களையும் குறிக்கும். இதில் சாத்தான் பொல்லாத ஆவிகள், விழுந்துபோன தூதர்களினால் தீமையின் ஆட்சி அனுமதிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியான தேவனுடைய ராஜ்யத்தில் பாவத்திலிருந்தும் தீமையிலிருந்தும் விடுதலை இருக்கும். தெய்வீக ஏற்பாட்டின் ஏழு நாட்கள் நேபுகாத்நேச்சார் ராஜாவின் ஏழு காலங்களான அனுபவத்தை நிழலாக கீழ்க்காணும் வசனங்களில் காணலாம் -

**தானியேல் 4:33-34**

"அந்நேரமே இந்த வார்த்தை நேபுகாத்நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று. அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான். அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது. அந்த நாட்கள் சென்றபின்பு நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன். என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது. அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருப்பவரை மகிமைப்படுத்தினேன்"

ஒவ்வொரு ஏழு நாட்களும் எதைக் குறிக்கிறது? என்றால் கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும்..

**2பேதுரு 3: 8**

"பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்"

ஆறு நாட்கள் தீமையானவற்றுக்கும் ஏழாவது நாள் கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியில் விடுதலையாகவும் இருக்கும் என்ற உண்மையை இயேசுவே விநோதமான முறையில் உறுதிசெய்துள்ளார்.

**லூக்கா 13:32**

"இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச்

சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்"

இதன் அர்த்தம் என்ன? நாம் ஒன்றை ஞாபகம் வைக்கவேண்டும். அது என்னவெனில், இன்றைக்கும் நாளைக்கும் என்று நம் ஆண்டவர் கூறியது - நம்முடைய 24 மணி நேரமான ஒருநாளின் காலக்கணக்கல்ல. அப்படியிருந்தால் அது தவறானதாகவும், அர்த்தம் இல்லாததாகவும் இருக்கும். ஆனால் இதன் அர்த்தம் ஆழமானது. அவர் குறிப்பிடுவது, நாள் கணக்கான ஆயிரம் வருடங்கள் ஆகும்(2பேதுரு 3:8). இதை நம் மனதில் வைத்து புரிந்துகொள்ளவேண்டும். இயேசு இந்த வார்த்தைகளை தன் முதலாம் வருகையில் குறிப்பாக கிபி 32-33ல் கூறினார். இப்போது மனுக்குலத்தின் கால சுழற்சியின்படி 4128 + 32 = 4160. இதைப் புரிந்துகொண்ட நாம் , கர்த்தரின் வார்த்தைகளை புரிந்துகொள்ள முயற்சிப்போம் -

- இன்று ⇨ 4160 லிருந்து ..5000 வரை
- நாளை ⇨ 5000 லிருந்து ...6000 வரை
- மூன்றாம் நாள் ⇨ 6000 லிருந்து ...7000 வரை

மூன்றாம் நாளில் நான் நிறைவடைவேன் என்பது, கர்த்தரின் ஆயிரம்வருட அரசாட்சியைக் குறிக்கிறது. நாம் இப்பொழுது அதன் துவக்கத்தைப் பார்க்கலாம். ஆம். 6000 வருடங்கள் முழுமையும் மனுக்குலத்தின் அனுபவம் தீமையாகும். இவ்வாறாக கர்த்தருடைய வருகையும் அவருடைய ஆயிரம் வருட அரசாட்சியும், தீமையின் 6000 வருட முடிவில் இருக்கும். இந்த எண்ணத்தின் ஒற்றுமையை பின்வரும் வசனத்தில் காணலாம்

**மத்தேயு 26:61**

"தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள்"

இங்கு கர்த்தர் தம்மைப்பற்றியும் தன் சபையைப்பற்றியும், தேவனுடைய ஆலயம் என்றும் அவருடைய மரணத்தையும், சபையைபற்றியும், அதனுடைய உயிர்த்தெழுதலையும், ஆயிரம் வருட துவக்கத்தின் கட்டுதலைப் பற்றியும் கூறுகிறார். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்-

**1தெசலோனிக்கேயர் 4:16**

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்"

இங்குள்ள மூன்று நாட்களும் கர்த்தருடைய நாள் கணக்காகும். அந்த நாட்கள் என்பது முதலாம், இரண்டாம் வருகைக்கு இடைப்பட்ட காலமாகும். குறிப்பாக இன்றைக்கும் நாளைக்கும் மூன்றாம் நாளைக் குறிக்கும். மீண்டும் இந்த விஷயத்தை யோவான்2:1-3 இல் காணலாம். 3ம் நாளிலே கலிலேயாவில் உள்ள கானாவூரிலே ஒரு திருமணம் நடந்தது.. ஆம் இது கிறிஸ்துவின் சரீர அங்கங்களின்முதலாம் உயிர்த்தெழுதலின் திருமணம் அல்லது கூடுதல் என்று அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளது. 3ம் நாள் என்பது கிறிஸ்துவின் ஆயிர வருடஅரசாட்சியைக் குறிக்கிறது. ஆதலால் 2ம் வருகையின் காலத்தேதி, கண்டிப்பாக 7000 வருடத்தின் துவக்கத்திலும், 6000

வருடத்தின் முடிவிலும் இருக்கும். இது சரிதானா என்று இப்பொழுது பார்ப்போம் -

**6000 - 4128 = கிபி1872.**

இங்கு நடந்தது என்ன? ஏன் வேதாகம காலக் கணக்கு இரண்டாம் வருகையின் காலத்தேதிக்கு ஆதரவாக இல்லை? இதில் இரண்டு வருட வித்தியாசங்கள் வருகிறது. இதன்அர்த்தம் என்ன? ஆம். இங்கு தேவனுடைய வேதாகமக் காலக்கணக்கிலிருந்து சத்தியத்தின் பொக்கிஷத்தை பெற்றுக்கொள்ளலாம். வேதாகம காலக்கணக்கில் முதலாவது இணைப்பு ஆதியாகமம் 5:3ல் காணப்படுகிறது -

அங்கு ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து கணக்கெடுப்பு தொடங்குகிறது. 'ஆதர் நூற்று முப்பதுவயதானபோது.. குமாரனைப்பெற்று அவனுக்கு சேத் என்று பெயரிட்டான். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டது ஆறாவது சிருஷ்டிப்பின் நாளாகும்(ஆதி1:28,31). எத்தனை வருடங்கள் ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்வதற்கு முன்பாக இருந்தனர்? இதன் பதில் இங்கு கிடைத்துள்ளது. சாத்தானின் தீமையின் ஆட்சி எப்போது தொடங்கியது? ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டவேளையிலா? என்றால் - இல்லவே இல்லை. அவர்கள் பாவம் செய்த நாளே ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டனர்(ஆதி3:23)அன்றிலிருந்து அனுபவம் தொடங்கியது.

இவ்வாறாக இந்த இரண்டு வருட வித்தியாசங்கள் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் பாவமில்லாமல் இருந்த சரியான காலங்களாகும்.

எவ்வளவு பெரிய மகா உண்மை. இவ்வாறாக வேதாகம காலக்கணக்கின் இலக்கணமான 4128 வருடங்களிலிருந்து 2 வருடங்கள்கழித்தால் ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து கிபி 1 வரை 4126 வருடங்கள் கிடைக்கிறது. இதை தெளிவுபடுத்தியபிறகு - நாம் 6000வருடங்கள் முடிவடைந்த காலத்தேதியை இப்பொழுது கணக்கிட்டால் கிடைப்பது

**6000 - 4126 = கிபி 1874.**

இது நம் ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கு மற்றுமொரு உறுதியாகும்.

இவ்வாறாக தேவன் ஓய்வெடுத்த ஏழாம் நாள் கிமு 4126 முதல் கிபி 2874 - 7000 வருடங்கள். சிருஷ்டிப்பின் ஏழாவது நாள் 7000 வருடங்களுக்கு சமமாகும். ஆறாவது நாள்கூட ஒரே மாதிரியான காலம் என்று வைத்துக்கொள்ளலாம்.

**ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட வருடம் = 6998**

**ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட வருடம் = 6999**

மேலும் இரண்டாவது வருகையின் காலத்தேதியான 1874க்கு ஆதரவாக உள்ள வேதப்பகுதிகள் நாம் இப்போது பார்க்கப்போகிறோம்.

எசேக்கியேல் 21:25-27

".. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு, கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், உரிமைக்காரனானவர் வருமளவும்.."

மற்றுமொரு வேதப்பகுதி "வருமளவும்" என்று தேதியைக் குறிக்கிறது. ராஜாவான இயேசுவின்

இரண்டாம் வருகையில் அவருக்கே அதைக்கொடுப்பேன் என்பது பூமியில் ஏற்படப்போகும் முடிவில்லாத அரசாட்சியைக் குறிக்கும். ஆனால், 'அவர் எப்பொழுது வருகிறார்?" என்ற வார்த்தைகளை கவனிக்கவும். 'மூன்றுமுறை கவிழ்ப்பேன்" என்பது எதைக்குறிக்கிறது?

யூதா ராஜாவான சிதேக்கியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு உள்ள காலத்தை குறிக்கிறது. சிலருடைய அபிப்பிராயம் என்னவென்றால் இது வெற்றிகரமான புறஜாதிகளின் உலகப் பேரரசுகள் கவிழ்க்கப்படுவதையும் ஒன்றுக்கொன்று மாற்றப்படுவதையும்(பாபிலோன், மேதோபெர்சியா, கிரேக்கம், ரோம்) குறிக்கும் என்கின்றனர். இது உண்மை என்றால் மூன்றுமுறை அல்ல, நான்கு முறை கவிழ்ப்பேன் உரிமைக்காரனானவர் வருமளவும் என்று வந்திருக்கும். அப்படியானால் இந்த வேதப்பகுதி உண்மையில் எதைக் குறிக்கிறது? மிகவும் எளிமையானது. இது மூன்று வெற்றிகரமான நாட்களான கவிழ்த்தலைக் குறிக்கிறது. உரிமைக்காரனானவர் வருமளவும், ஆகவே, இந்த நாட்கள் என்பது என்ன? இது வேதாகமத்தின்படி காணப்படும் சாட்சியமளிக்கும் குறிப்பாகும்.

2பேதுரு 3:8 "கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போலவும் இருக்கிறதென்கிற.."

இவ்வாறாக ஒவ்வொரு கவிழ்ப்பேன் நாட்களும், ஆயிரம் வருடங்களாகிய காலத்தைக் குறிக்கும். நாம் இப்போது விஷயத்தைப் பார்ப்போம்.

**சிதேக்கியா ராஜா வீழ்ச்சியடைந்தது - கிமு 606**
**ஆதாம் வீழ்ச்சியடைந்தது - கிமு 4126**

ஆதாமின் வீழ்ச்சியில் இருந்து சிதேக்கியா ராஜாவின் வீழ்ச்சி வரை எத்தனை வருடங்கள் ஆனது? இதற்கான பதிலை 4126-606 -3520 வருடங்கள். ஆதாம் வீழ்ச்சியிலிருந்து 3520 வருடங்கள். தீர்க்கதரிசனமாகிய கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன் என்பதின் அர்த்தம் இங்கு தான் தொடங்குகிறது.

**கவிழ்ப்பேன் 3520 - 4000**
**கவிழ்ப்பேன் 4001 - 5000**
**கவிழ்ப்பேன் 5001 - 6000**

ஆம். தீர்க்கதரிசனத்தின் முடிவானது கவிழ்ப்பேன் என்பது ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து 6000 வருடங்களின்முழுமையைக்குறிக்கிறது.தீர்க்கதரிசனத்தின்படி உரிமைக்காரனானவர் வருமளவும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காலம் என்ன? எதைக் காட்டுகிறது? 6000 - 4126 - கிபி 1874. ஆதாமின் வீழ்ச்சி கிறிஸ்துவுக்கு முன்பாக. மற்றொரு காலத் தேதியை நிச்சயப்படுத்துகிறது.

நாம் இப்பொழுது இன்னுமொரு நிச்சயத்தைப் பார்ப்போம்.

மத்தேயு 25:6

"நடுராத்திரியிலே இதோ மணவாளன் .. அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று"

ஆம்.சபையின் மணவாளனாகிய இயேசு ராஜாவின் இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசன காலத்தேதியாகும். இங்கு நாம் படிப்பது நடுராத்திரியில் மணவாளன் வந்துள்ளார் என்ற அறிவிப்பின்

காலப்பகுதியாகும்.

இதோ மணவாளன் நடுராத்திரியில் என்பதுஎதைக் குறிக்கும்? நடுராத்திரி என்பது ஒருநாள் முடிவதும், புதிய நாள் தொடங்கும் நேரத்தைக் குறிக்கிறது. இங்கு குறிப்பிடப்படும் நாள் எதைக் காட்டுகிறது? ஏன் இது மணவாளனின் நாள்? அது அவருடைய நாளின் தொடக்கம். அவர் திரும்பிவரும்போது, ஆதாம் வீழ்ச்சியில் இருந்து ஏழாவது ஒரு ஆயிரம் ஆண்டு( யோபு 5:19).

நடுராத்திரி என்பது ஆறாயிரம் வருடங்கள் முழுமையையும், ஏழாயிரம் வருடத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. அந்த திட்டமான நேரத்திலே மணவாளனின் இரண்டாம் வருகை ஏற்பட்டது. ஆதாம் வீழ்ச்சியில் இருந்து ஆறாயிரம் வருடங்கள் எப்பொழுது முடிவடைகிறது? அல்லது முடிவடைந்தது?

**6000 - 4126 = கிபி 1874.**

ஆம். கர்த்தருடைய கால கணக்கெடுப்பின்படி நடுராத்திரி என்பது ஆறாவது நாளுக்கும், ஏழாவது நாளுக்கும் இடைப்பட்டதாகும். கிபி 1874 என்றகாலத் தேதிக்கு மற்றுமொரு வேதாகம நிச்சயம். உண்மையில் காலத்தேதி கணக்கெடுப்பு எல்லா வழிகளிலும், கோணத்திலும் பார்க்கும்போது மிகச்சரியாக பொருந்துவது எதிர்பாராத ஒத்திருத்தல் அல்ல, தீபத்தில்இருந்து (வேதாகமம் - தேவனுடைய வார்த்தை) பிரகாசிக்கும் சத்திய வெளிச்சத்தில் தெளிவான ஆதாரம்ஏற்ற காலத்தில் கண்டுபிடிக்கலாம்.

நாம் இப்பொழுது அவர் வருகிற விதத்தை, அவருடைய சொந்த வார்த்தைகளினாலும் இரண்டாம் வருகைக்கு தொடர்பான மற்ற வேத வசனங்களின் மூலமாக உறுதிப்படுத்தலாம்.

**லூக்கா 17:20,21**

"தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வரும்?என்று பரிசேயர் அவர்களிடத்தில்
கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் ..தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது..
இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்"

இந்த தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மை என்று பாருங்கள். கிபி 1874க்கு முன்பாக அல்லது பின்பாக இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் ஒருவராலும் சொல்லப்படமுடியாது. கர்த்தருடைய வருகையைப் பற்றியும், ராஜ்யத்தைப் பற்றியும், உலகத்தாரின் மாம்சீக கண்களுக்கு தெரியாது என்பதைத்தான் பிரத்தியட்சமாக வராது என்று சொல்கிறார். ஆனால் மனக்கண்களினாலும், உறுதியான தீர்க்கதரிசன வசனங்களினாலும், தேவனுடைய வார்த்தையாகிய வெளிச்சத்தினாலும் கண்டுகொள்ளலாம்.

எப்படி நாம் அறியமுடியும்?நாம் கர்த்தருடைய சகோதரர்க்கு உள்ள உரிமையைப் பெற்றிருக்கிறோம்.

**1தெசலோனிக்கேயர் 5:4**

"சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக,
நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.

மேலும் ஒரு வசனத்தில் வாசிக்கிறோம் -

**அப்போஸ்தலர் 1:11**

"உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர்

எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்"

இதுவும் இரண்டாம் வருகையில் நிறைவேறியது. அப்படியேவருவார் என்பதன் பொருள் என்ன? அவர் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது அவருடைய சீஷர்களும் அவரைப் பின்பற்றினவர்களும் மாத்திரமே பார்த்தார்கள் என்பதை வாசிக்கலாம்-

அப்போஸ்தலர் 1:9,10

"இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது"

அதேபோல் அவருடைய இரண்டாம் வருகையிலும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டும் தான் புரிந்துகொள்ளும் கண்கள் மூலம் கர்த்தரைக் காண்பார்கள். இவ்விதமாக நாம் அறிந்திருக்கிற தேவனுடைய ராஜ்யம் 1874ம் வருடம் துவங்கிய "கண்ணுக்குத் தெரியாத" பாகத்தையும், கூடிய விரைவில் இஸ்ரயேலில் துவங்கும் "கண்ணுக்குத் தெரிகிற பாகத்தையும்" கொண்டுள்ளது. கடைசியாக எவ்வளவு பெரிய உன்னத விஷயம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டு, தெரியப்பட்டுள்ளது என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் நாம், ஒரு விநோதமான வசனத்தைக் காணலாம் -

மாற்கு 13:35

"அப்படியே நீங்களும் விழித்திருங்கள். ஏனெனில் வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள்"

1.**'சாயங்காலத்தில்"** - இரண்டாம் வருகைக்கு முந்தைய நிலையை குறிக்கிறது

2. **'நடுராத்திரியிலோ"** - இது கர்த்தரின் **பிரசன்னம்(பரோஷியா)** 1874ல் வந்ததைக் குறிக்கும்

3. **'சேவல் கூவும் நேரத்திலோ"** - சூரிய உதயத்துக்கும் முந்தைய காலப்பகுதி. இது கர்த்தரின் இரண்டாம் வருகையின் அடுத்தபாகமாகிய **எபிப்பானியா**வைக் குறிக்கும்

4. **'விடியற்காலத்திலோ"** - இதுஇயேசுவும் அவரது சபையும் கண்ணுக்குத் தெரிகிற இராஜ்யத்தின் மகிமையில் உலக மனுக்குலத்திற்கு வெளிப்படுகிற **அப்போகலுப்சிஸ்** பாகமாகும்.

இம்மாபெரும் இரகசியத்தை நிழலாக கூறப்பட்டுள்ளதை வசனத்தில் காண்போம் -

ஆதியாகமம் 24:63-65

"ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ண வெளியே போயிருந்து.. ரெபேக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது, ஊழியக்காரனை நோக்கி, அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள்? அவர் தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான்"

இங்குள்ள 24ம் அதிகாரத்தில் உள்ளபகுதி ஒரு நிழலாகும்.

**ரெபேக்காள் - இயேசுவின் மணவாட்டியாகிய சபை**யைக் காண்பிக்கிறது

**எலியேசர் (ஊழியக்காரன்) - தேவனுடைய பரிசுத்தஆவி**யைக் குறிக்கிறது

**ஈசாக்கு - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து**வை குறிக்கிறது.
**வெளியே - உலகத்தை** அடையாளமாக கூறப்பட்டுள்ளது(மத்தேயு13:38)

இவ்வாறாக சபை முதலாவதாக கர்த்தரையும், அவருடைய இரண்டாம் வருகையின் விதத்தையும் கண்டுகொண்டோம் என்பதையும் விளக்கும் ஒரு பாடம் இது. எப்படி ஊழியக்காரனான எலியேசரை கேட்கும்போது விஷயத்தையும், கர்த்தரை கண்டுகொள்ளுதலையும் விளக்குகிறார். இது எதைக்காட்டுகிறது? நாம் படிக்கின்றவாறு தேவனுடைய பரிசுத்தஆவியின் மூலமாக தெரிந்துகொள்கிறோம்.

**யோவான் 16:13**

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவார்"

தேவன் தாமே கிருபை செய்வாராக. ஆமென்

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/